இணைப்பு-II.

[12ம் பக்கத்தில் 500-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினு விற்குரிய விடையைக் காண்க].

1919ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின்கீழ் கால்நடைகள் வைத்திருக்கும் தொழுவங்களுக்கு நகராட்சியிடமிருந்து உரிமம் பெற்றாக வேண்டும்.

2. சென்னை நகரில் தற்சமயம் உரிமம் பெற்ற 800 தனியார் கால் நடைத் தொழுவங்களும் அவற்றில் 10,000 பசுக்களும், எருமைகளும் உள்ளன. இவை சரிவர பராமரிக்கப்படுகின்றதா என மாநகராட்சியின் கோட்டத் துப்புரவு ஆய்வாளர் அவர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. உரிமம் பெருத தொழுவங்களில் ஏறத்தாழ 13,000 கால்நடைகள் உள்ளன. கடந்த ஆண்டிலிருந்து மாநகராட்சி கடைபிடிக்கும் தாராளமான உரிமக்கொள்கையின்படி தொழுவத்தின் சொந்தக்காரர்கள் தொழுவங் களுக்கான வசதிகளைப் படிப்படியாகப் பெருக்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார் கள். தொழுவ உரிமத்தைக் காட்டி மாட்டுத் தீவனத்தை நியாய விலையில் பெறுகிறார்கள் என்றும் தெரியவருகிறது.

3. 1919-ஆம்ஆண்டு சென்னைமாநகராட்சி சட்டத்திலோஅல்லது 1939-ஆம் ஆண்டு மக்கள் நல்வாழ்வுச் சட்டத்திலோ, சாலையில் திரியும் கால்நடை களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வகை செய்யப்படவில்லை. ஆனால், 1888-ஆம் ஆண்டு நகர காவல் சட்டத்தின்படி தடை செய்யலாம். பல காவல் நிலையங்களில் தொழுவப்பட்டிகள் இல்லை. இருக்கும் தொழுவப்பட்டிகள் இப்பிரச்சினையைத் தீர்க்கப் போதுமானதாக இல்லை. எனவே, அயனாவரம் பால்வள நிறுவனத்திற்குச் சொந்தமான இடத்தில் மத்திய தொழுவப் பட்டி அமைப்பதற்கான கருத்துரு ஒன்றை சென்னை மாநகராட்சி சென்னை காவல் துறையுடன் கலந்து ஆய்வு செய்து வருகின்றது. இத் தொழு வத்தில் மாதத்திற்கு மூன்று ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய் வரை கட்டணம் செலுத்தி ஏறக் குறைய 160 கால்நடைகளை பராமரிக்கத் திட்டம் வகுக்கப் பட்டுள்ளது.

4. சென்னை மாநகராட்சியானது காவல் துறைக்கு கால்நடைகளை அப் புறப்படுத்துவதற்காக நான்கு இழுவைகளை அளித்துள்ளது. மேலும் தேவைப்படும்போது இழுவைகளை இழுப்பதற்கு டிராக்டர்களையும் காவல் துறைக்கு அளிக்க முடிவு செய்துள்ளது.

5. தெருவில் திரியும் கால்நடைகளை மட்டுமின்றி சென்னை நகரில் உள்ள எல்லாக் கால்நடைகளையும் அப்புறப்படுத்தி நகர எல்லைக்கு அப்பாலுள்ள ஓர் இடத்தில் அமைப்பது குறித்து சில ஆண்டுகளுக்கு முன்பு மாநகராட்சி கருத்துரு ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளது. இக்கருத் துருவில் தனியார் வீடுகளில் இரண்டிற்கு மேற்பட்ட கால்நடைகளை வைத் திருக்கலாகாது எனவும் கண்டிருந்தது. இக்கருத்துருவை பால்வள நிறு வனமும், சென்னை மாநகராட்சியும் ஆய்வு செய்து வருகின்றன. ஆனால் இறுதியான முடிவு எதும் எடுக்கப்படவில்லை.

———